2019 ஜூலை 8]

கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நபார்டு திட்டத்தின் மூலமாக இந்த ஆண்டு கால்நடை மருத்துவமனைகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். அந்த வகையில், திட்டக்குடி தொகுதியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கும் கட்டடம் கட்டுவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, கால்நடைகளுக்குத் தேவையான தண்ணீர்த் தொட்டிகளை ஆங்காங்கே அமைக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழகம் முழுவதும் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக கால்நடைகளுக்காக இதுகாறும் 15,550 தொட்டிகள் ஆங்காங்கே கட்டப்பட்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, திட்டக்குடி தொகுதியிலே கால்நடைகளுக்கு தண்ணீர்த் தொட்டி அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நல்ல தண்ணீர் வசதியுடன் கண்டிப்பாக தொட்டிகள் கட்டித் தரப்படும் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

55—

மகப்பேறு மருத்துவமனை

***14735—திரு. கே.எஸ். விஜயகுமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், ஆரம்பாக்கம் ஊராட்சியில் மகப்பேறு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், ஆரம்பாக்கம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று இருக்கிறது. அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தற்போது 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அந்தக் கட்டடத்தில் பிரசவ வார்டு திறக்கப்பட்டு, அங்கே மாதந்தோறும் சுமார் 5 பிரசவங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்பு வேண்டாமா? நீங்கள் கையை உயர்த்தி வாய்ப்பு கேட்டுவிட்டு, வேறு எங்கேயோ பேசிக் கொண்டிருந்தால் நான் என்ன செய்வது?

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி, அனகாபுத்தூர் நகராட்சி, பொழிச்சலூர் ஊராட்சி ஆகிய பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. அனகாபுத்தூர் நகராட்சியைப் பொறுத்தமட்டில், 60 ஆயிரம் மக்கள் தொகை உள்ள பகுதி. அங்கே 400 சதுர அடியில்தான் 6 படுக்கைகள் வசதி கொண்ட மகப்பேறு மருத்துவமனை உள்ளது. அது 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. அதேபோல், பொழிச்சலூர் ஊராட்சியில் உள்ள சுகாதார நிலையத்தில் போதிய வசதிகள் இல்லை. ஆகவே, இதுசம்பந்தமாக கடந்த ஆண்டு சுகாதாரத் துறைச் செயலாளர் அவர்கள் நேரடியாக வந்து பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். அங்கே கூடுதலாக வசதிகள் செய்யப்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அங்கே இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் நிலம் இருக்கிறது; 10, 20 ஆண்டுகளாக காலியாகவே இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னால், அந்த இடத்தின் விவரங்களை புல எண்ணோடு கொடுக்கிறேன். புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை அந்த இடத்தில் விரிவுபடுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், குரோம்பேட்டை அரசு மருத்துவமனைப் பணிகள் முடிக்கப்படும் தருவாயில் உள்ளன. அது எப்போது திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

2019 ஜூலை 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே, அனகாபுத்தூர் மருத்துவமனை குறித்து கடிதம் கொடுத்திருக்கிறார்கள். இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் அந்த இடம் வருவதால், உரிய விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டியிருக்கின்றன. அந்த விதிமுறைகளின்படி, அந்த இடத்தை நாம் கேட்டு அவர்கள் தருகின்றபட்சத்தில், அனகாபுத்தூர் மருத்துவமனை விரிவுபடுத்தப்படும். பொழிச்சலூர் ஆரம்ப சுகாதார நிலையம் குறித்தும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே, குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கும் மேலாக பல்வேறு வசதிகளை அங்கே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். அந்தக் கட்டடப் பணிகள் முடிவுறக்கூடிய நிலையில் இருப்பதால், எவ்வளவு விரைவாக அதைத் திறக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக அது திறக்கப்படும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.*

திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதியில் மேல்மலையனூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேல்மலையனூர் என்பது ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் இருக்கின்ற பிரசித்தி பெற்ற இடம். தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் வெளி மாவட்டங்களிலிருந்து வந்து செல்கின்ற இடம். மேல்மலையனூர், தாலுகாவினுடைய தலைமையிடமாக இருக்கின்ற காரணத்தினால் அங்குள்ள துணை சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் வசதி கொண்ட அரசு மருத்துவமனையாக, 24 மணி நேரமும் செயல்படுகின்ற மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டுமென்ற திட்டம், மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம். இப்பொழுது 385 ஒன்றியங்களுக்கும் அந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஒன்றியத்திலும் ஒரு 30 bedded hospital இருக்கிறது. இதுபோன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் கோரிக்கைகள் இருக்கின்றன. அவை அரசினுடைய நிதிநிலைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும்.

மேல்மலையனூரைப் பொறுத்தவரையில், எங்கெல்லாம் நிறைய பக்தர்கள் வருகிறார்களோ, அந்த இடங்களிலும், overcrowding இருக்கின்ற இடங்களிலும் நடமாடும் மருத்துவமனைகள் மூலமாக இப்போது camp போடுகிறோம். இப்போது மிகச் சிறப்பான, விரிவான ஏற்பாடு காஞ்சிபுரத்தில் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, எவ்வளவு கூட்டம் வந்தாலும் அதைச் சமாளிக்கக்கூடிய capacity மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழுள்ள நடமாடும் மருத்துவக் குழுவிற்கு இருக்கிறது. வருங்காலத்தில் அரசு தங்களுடைய கோரிக்கையைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

திரு. கோ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியிலே நல்லாட்சி நடத்தி வரும் மண்ணின் மைந்தர், தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், அரசுக்கு உறுதுணையாக இருக்கும் தமிழ்நாட்டினுடைய துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

சேலம் மேற்கு தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பாகல்பட்டி ஊராட்சியில் நல்ல நிலையிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தில் தினசரி சுமார் ஆயிரம் வெளி

2019 ஜூலை 8]

நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். 5 முதல் 10 வரையிலான கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிரசவம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை, 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்திக் கொடுக்க, இந்தியாவிலேயே, தமிழகத்திலே மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் பல விருதுகளைப் பெற்றுவரும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, அரசினுடைய நிதிநிலைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.*

திரு. பா. நீதிபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மதுரையில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தினுடைய துணை இயக்குநர் அலுவலகம், நிருவாக வசதிக்காக பல மாவட்டங்களில் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே, உசிலம்பட்டியை இரண்டாகப் பிரித்து அதனை தலைமையிடமாகக் கொண்டு, துணை இயக்குநர் அலுவலகம் வேண்டும் என்று கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் கேட்டிருந்தேன். அது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். இந்த ஆண்டிலாவது நிருவாக வசதிக்காக இரண்டாகப் பிரித்து, உசிலம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு துணை இயக்குநர் அலுவலகம் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிருவாகக் காரணங்களுக்காக பெரிய சுகாதார மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. இது அரசினுடைய கொள்கை முடிவாக இருக்கிறது. வரக்கூடிய காலங்களில் அங்கு இருக்கக்கூடிய blocks, அதாவது ஒன்றியங்களின் எண்ணிக்கையினுடைய அடிப்படையில் அரசு அதைக் கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

56—

வீட்டுமனைப் பட்டா

***27835—திரு. எஸ். அம்பேத்குமார்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, வெடால் கிராமம், இருளர் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், வெடால் கிராமத்தில் வசித்துவந்த இருளர் குடும்பங்களில், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை ஏற்று, மேற்படி பகுதிகளிலே கிராம புல எண் 246/8B–ல் வசித்து வந்த 14 நபர்களுக்கு ஒரு முறை வரைமுறைப்படுத்துகிற திட்டத்தின்கீழ் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. ஏனைய 13